தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

**அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

(05.11.2022 முதல் 09.11.2022)

**அறிக்கை எண்: 88/2022** **தேதி: 04.11.2022**

## அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 28 °செ முதல் 31 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 24 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (05.11.2022 முதல் 09.11.2022)

| கடந்த வார வானிலை (01.11.2022 முதல் 03.11.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (05.11.2022 முதல் 09.11.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 01/11 | நாள்-2 02/11 | நாள்-3 03/11 | தேதி | நாள்-1 05/11 | நாள்-2 06/11 | நாள்-3 07/11 | நாள்-4 08/11 | நாள்-5 09/11 |
| 0.0 | 4.2 | 10.8 | மழை (மி.மீ.) | 20 | 8 | 10 | 4 | 3 |
| 31 | 28 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 29 | 30 | 30 | 31 | 31 |
| 23 | 24 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| 8 | 7 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 4 | 4 |
| 80-82 | 83-81 | 90-84 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85-60 | 85-60 | 80-55 | 80-55 | 80-55 |
| 10 | 9 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| வட வட மேற்கு | வட வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் அதிக மேகமூட்டத்துடன் காணப்படும். 05.11.2022 முதல் 09.11.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 °செ முதல் 31 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும் |
| | | வரும் நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என்பதால் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் / தள்ளிப்போடவும் |
| நெல் | நடவு வயல் | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், குளோர்பைரிபாசை எக்டருக்கு 1250 மி.லி தெளிக்கவும் அல்லது கார்போசல்பான் 6 % குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது கார்டாப் கைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ தூவவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | ஆடு, மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**